www.tamilarangam.net



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

## தொடர் தாக்குதல்கள் திணறியது இந்தியப்படை

தென்னிலங்கையில் ஜே.வி.பி. வீழ்ச்சியடைந்த பின்னர் பிரேமதாச அரசுக்கு புதுத் தெம்பு ஏற்பட்டிருந்தது.

இந்தியப் படையும் முழுமையாக வெளியேறிவிட்டால் தனது அரசாங்கத்திற்கான மரியாதை தென்னிலங்கையில் அதிகரிக்கும் என்பது பிரேமாவின் நம்பிக்கை.

அதேசமயம் இந்திய அரசும் சில இராஜதந்திர வலை வீச்சுக்களில் ஈடுபட்டது. பிரேமதாசாவுக்கு ஒரு பாடம் படிப்பிப்பதற்காக புலிகளுடன் மறுபடி நட்பை ஏற்படுத்திக் கொள்ளக்கூட இந்திய அரசு தயாராக இருந்தது.

"எங்களுக்குள் பேசிக்கொள்வோம் உங்களுக்கு தேவையான உதவிகளை இந்திய அரசு செய்து தரும்." என்று இந்திய உளவு நிறுவனமான 'றோ' மூலம் ஆசை வலை வீசப்பட்டது.

ஆனால், இந்திய அரசை பிரபாகரன் நம்பத் தயாராக இருக்கவில்லை. அன்போடு அழைத்துச்சென்று புதுடில்லியில் வைத்து ராஜீவ் காந்தியும் இந்திய அரசும் நடந்து கொண்ட முறைகளை பிரபாகரன் மறக்கவும் இல்லை.

பிரபாகரனை ஆசை வலையில் வீழ்த்த முடியவில்லை என்றதும், மற்றொரு இராஜதந்திர முயற்சியை முடுக்கி விட்டது இந்திய அரசு.

வடக்கு-கிழக்கு மாகாணசபை ஈழப் பிரகடனம் செய்யப் போவதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் ஏனையோரும் கூறிக்கொண்டிருந்தனர் அல்லவா.

அதற்கு மூலகாரணமாக இருந்தது இந்திய அரசுதான். வடக்கு-கிழக்கு மாகாண சபை ஈழப் பிரகடனம் செய்யுமானால் நிலமை விபரீதமாகும் என்று இலங்கை அரசு அஞ்சும். மறுபடி இந்திய அரசிடம் மண்டியிடும் என்று நினைத்தனர்.

ஆனால், மாகாணசபை அரசின் பலம், மாகாணசபைக்கு ஆதரவான கட்சிகளின் பலம் என்பவை தங்களுக்கு ஒரு அச்சுறுத்தல் அல்ல என்பதை பிரேமதாசாவும், ரஞ்சன் விஜயரத்னவும் தெரிந்து வைத்திருந்தனர்.

புலிகள் தம்முடன் உறவாக இருப்பதால், 'இந்தியப் படை வெளியேறிய மறுநிமிடமே மாகாண அரசாங்கத்தை கவிழ்த்துவிடலாம் என்பதும் அவர்களது நம்பிக்கை.

இந்தியப் படையையே திணறடித்துக் கொண்டிருக்கும் புலிகளுக்கு, மாகாண சபை எம்மாத்திரம்? என்று இலங்கை அரசு நினைத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

### பிரேமா கடிதம்

இந்தியப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு புலிகள் கூறிய காரணங்களில் ஒன்று, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து நடந்துவருகிறது என்பதாகும்.

ஆனால், இந்தியப் படையினரும், இந்திய அரசும் புலிகள் வேண்டுமென்று குற்றம் சாட்டுகின்றனர் என்று கூறியிருந்தனர்.

ஆனால், இந்தியப் படையை உடனடியாக வாபஸ்பெறமுடியாமைக்கு காரணம் தெரிவித்து - இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி பிரேமாவுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதாக ராஜீவ் குற்றம் சாட்டியிருந்தார்.

புலிகள் சொன்னபோது எதனை அலட்சியம் செய்தனரோ, அதே காரணத்தை இலங்கையில் இருந்து படையை வாபஸ் பெறுவதை தாமதிப்பதற்கான பிரச்சகைளில் ஒன்றாக பின்னர் கூறுவதற்கு முனைந்தது இந்தியத் தரப்பு.

ராஜீவின் கடிதத்துக்கு பிரேமா பதில் கடிதம் அனுப்பியிருந்தார்.

இரு நாட்டுத் தலைவர்களும் கடிதப் போர் ஒன்றையே நடத்தத் தொடங்கி இருந்தனர். தங்கள் தங்கள் இராஜதந்திரங்களை அக் கடிதங்களில் கூர்தீட்டிப் பார்த்துக் கொண்டனர்.

இது பிரேமா அனுப்பிய கடிதத்தின் சுருக்கம்:



பயிற்சி முகாமில் புலிகள்

"1989 ஜூன் மாதம் 2ம் திகதி நான் தங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டதைப் போன்று, ஜனாதிபதித் தேர்தலின்போதும், பாராளுமன்றத் தேர்தலின்போதும் நான் அளித்த முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றாக இந்திய அமைதிப் படையினரின் வாபஸ் பெறுகையும் இடம்பெற்றுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில், 'இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதுடன், இந்தியப் படையினர் வாபஸ்பெற்றுச் செல்லுமாறும் கோருவோம்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆகவே, 95 வீதத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இந்தியப் படையினரின் வாபஸ் பெறுகைக்கு தெளிவான பணிப்பாணையை அளித்துள்ளனர்.

உங்கள் கவனத்திற்கு இதுவரை கொண்டுவரப்படாத முக்கியமான அபிப்பிராயம் ஒன்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் மூன்று இனங்களையும் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் இந்தியப் படையினரை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் எனக் கோரிவருகின்றனர்.

அரசாங்க ஆதரவு பெற்ற குடியேற்றக் கொள்கையை தொடர்ந்தும் அமுல் செய்வதன் மூலம் தமிழ் பேசும் பிரதேசங்களின் குடித்தொகை சமநிலையைக் குலைப்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு முயற்சிப்பதாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள்.

நான் அக் கருத்தை வன்மையாக மறுக்கிறேன். இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் அப்பகுதிகளில் எவ்வித மான குடியேற்றங்களும் இடம் பெற்றிருக்கவில்லை.

தங்களுடைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள தன் பிரகாரம், தாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை களையும் பணியில் ஈடுபட்டிருந்தீர்கள்.

அப்பணி முற்றும் பூர்த்தியாகவில்லை. அத்துடன் அவர்களை பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள வைக்கவும் முடியவில்லை.

இந்தியப் படையினர் வாபஸ் பெற்றுக் கொண்ட பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை கைவிடுதலை உறுதிப்படுத்தும் வல்லமை எமக்கு இருக்கிறது.

இலங்கை அரசின் திட்டவட்டமான கோரிக்கையின் பேரிலன்றி, இலங்கைக்குள் இந்திய அரசாங்கத்திற்கு அல்லது அதன் ஆயுதப் படைகளின் எந்தவொரு நடவடிக்கையும் இறைமையுடைய நாட்டின் உள்விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் ஒரு பாரதூரமான தலையீடாகவும், சர்வதேச சட்டத்தின் மீற முடியாத நியதிகளை மீறுவதாகவே அமையும். தங்களுடைய நோக்கம் அதுவல்ல என்பதே எனது நம்பிக்கை."

### ராஜீவ் கோபம்

பிரேமதாசாவின் மேற்கண்ட கடித வாசகங்கள் ராஜீவ் காந்திக்கு எரிச்சல் ஊட்டியிருக்கும் என்பது திண்ணம்.

பிரேமதாசாமீது ராஜீவ் காந்தி எந்தளவு கோபத்துடன் இருந்தார் என்பது பின்னர் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி மூலம் புலனாகியது.

ராஜீவ் காந்தி பலியான பின்னர் நீண்ட நாள் கழித்து ஜனாதிபதி பிரேமதாசா இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அச் சமயம் தனது பாரியார் ஹேமா சகிதம் சோனியாவை சந்திக்க விரும்பியிருந்தார். ஆனால், பிரேமதாசாவை சந்திக்க சோனியா மறுத்துவிட்டார்.

இந்தியப் படையினரை புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யுமாறு-பிரேமதாசா கேட்டிருந்தும், இந்தியப் படையினர் புலிகளை தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

பிரபாகரன் எங்கிருக்கிறார் என்ற தகவலைப் பெறுவதுதான் இந்தியப் படையினதும், உளவு அமைப்புக்களதும் பிரதான நோக்கமாக இருந்தது.

முல்லைத்தீவில் சாதாரண உடையில் நடமாடி புலிகள் பற்றிய தகவலைத் திரட்டிக் கொண்டிருந்த ஒருவரைப் பற்றி புலிகளுக்கு தகவல் கிடைத்தது.

01.07.89 அன்று முல்லைத்தீவு நகருக்கு குறிப்பிட்ட உளவாளி வந்தபோது புலிகள் இயக்க பிஸ்டல் குழுவினர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

கொல்லப்பட்ட உளவாளியின் பெயர் சுகுமாரன். 'றோ' உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்.

### மோதல்கள்

யாழ்ப்பாணம் நெல்லியடியில் இந்தியப் படையினரும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட இயக்கமொன்றின் உறுப்பினர்களும் இணைந்து புலிகளின் அணி ஒன்றை சுற்றிவளைக்க முற்பட்டனர்.

புலிகள் பதிற்தாக்குதல் நடத்திக் கொண்டு சுற்றிவளைப்பை உடைத்து தப்பிச் சென்றனர். அம் மோதலில் ஐந்து படையினரும், இயக்க உறுப்பினர்கள் சிலரும் பலியாகினர்.

அதே நாள் முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இந்தியப் படையினரின் ரோந்துப் படையணிக்கும் புலிகளுக்கும் இடையே பாரிய மோதல் ஒன்று இடம்பெற்றது. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாக மோதல் தொடர்ந்தது.

இந்தியப் படை தரப்பில் சிலர் கொல்லப்பட்டனர். மோதலின் பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் பனங்கள்ளை மூக்குமுட்ட குடித்துவிட்டு ஈ.என்.டி. எல்.எஃப். உறுப்பினர்கள் சிலர் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர்.

அப்பக்கமாக வந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் அவர்களை இனம் கண்டு கொண்டு சுடத் தொடங்க, ஈ.என்.டி. எல்.எஃப். உறுப்பினர்கள் தப்பியோட முற்பட்டனர். ஒருவர் பலியானார். நான்குபேர் காயமடைந்தனர். 09.07.89 அன்று அச் சம்பவம் நடைபெற்றது.

10.07.89 அன்று பருத்தித்துறை இந்தியப் படை காவலரண்மீது அதிரடி தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இந்தியப் படையினர் மூன்று பேர் பலியாகினர். புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

யாழ்ப்பாணம் இளவாலைச் சந்தியில் இந்தியப் படையினர் நின்று கொண்டிருந்தனர். அப்பக்கம் சென்ற பெண்கள்மீது அவர்களது கண்கள் பாய்ந்து கொண்டிருந்தன.

அடிக்கடி அங்கு இந்தியப் படையினர் வந்து செல்வதை அவதானித்த புலிகள் பலநாட்களாக தாக்குதலுக்கு இலக்கு வைத்திருந்தனர்.

10.07.89 அன்று இளவாலைச் சந்திக்கு வந்து சேர்ந்த இந்தியப் படையினரை நோக்கி புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தியதில், நான்கு இந்தியப் படையினர் பலியாகினர்.

மட்டக்களப்பு பாண்டிருப்பு பகுதியில் இருந்த இந்தியப் படை காவலரண் ஒன்று 13.07.89 அன்று தாக்கியழிக்கப்பட்டது. மூன்று படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் சேதம் இல்லை.

15.07.89 அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் இருந்து நெடுங்கேணிக்கு வாகனத் தொடராக சென்று கொண்டிருந்தது இந்தியப் படை.

காட்டுப்பகுதியில் பதுங்கி நிலை எடுத்திருந்த புலிகள், கண்ணிவெடிகளையும் புதைத்து வைத்திருந்தனர்.

வாகனத் தொடர் நெருங்கியதும் கண்ணிவெடி வெடிக்க, புலிகளின் துப்பாக்கிகளும் சீறத் தொடங்கின.

அதே சமயம் பின்னே வந்த வாகனங்களில் இருந்த படையினர் கீழே குதித்து வாகனங்களை கவசமாகக் கொண்டு நிலை எடுத்து தாக்கத் தொடங்கினர்.

அதனால் புலிகளின் அணிகளால் ஆயுதங்களை கைப்பற்ற முடியவில்லை. பலியான சிப்பாய்களின் உடல்களையும், ஆயுதங்களையும் தூக்கி ஏனைய வாகனங்களில் போட்டுக் கொண்டு இந்தியப் படையினர் சென்றனர்.

இரண்டு வாகனங்கள் சேதமாகின. குறைந்தது பத்துப் படையினராவது பலியாகி இருக்கக்கூடும்.

மட்டக்களப்பு பழுகாமம் பகுதியில் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்க உறுப்பினர்கள் மூவரை புலிகள் சுட்டுக் கொன்றனர். இச்சம்பவமும் 15.07.89 அன்றுதான் நடைபெற்றது.

17.07.89 அன்று மட்டக்களப்பு கல்முனையில் இந்தியப் படையினர் நடந்து ரோந்து சென்றனர். இச் செய்தி புலிகளுக்கு எட்டிவிட்டது.

எங்கு வசமாக மாட்டுவார்கள், எப்போது தாக்கலாம் என்று இலக்குத் தேடித் திரிந்த புலிகளின் தாக்குதல் குழுவொன்று வந்தது.

ரோந்து சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. படையினரும் திருப்பித் தாக்கினர். மோதலின் முடிவில் இரண்டு இந்தியப் படையினர் பலியாகினர். அவர்களுடன் துணையாகச் சென்ற ஈ.என்.டி. எல்.எஃப். உறுப்பினர்கள் மூவர் காயமடைந்தனர்.

ஒரு புறம், இந்தியப் படையை வெளியேறுமாறு கோரும் இலங்கை அரசின் நெருக்குதல், மறுபுறம் புலிகளின் தொடர் தாக்குதல்கள், இந்திய அரசுக்கு 'ஏனடா அங்கே போய் கால் வைத்தோம்?' என்றாகிவிட்டது.

(தொடர்ந்து வரும்)

## பிரபாவுக்கு வீசப்பட்ட வலைகள்

பிரபாகரனிடம் பத்து வருட காலத்திற்கு வடக்கை ஒப்படைக்க தயாராக இருந்ததாக ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருந்தார். அவர் கூறியதை அமெரிக்க சஞ்சிகை 'ரைம்' சமீபத்தில் வெளியிட்டது.

அதனால் ஏற்பட்ட சர்ச்சைகள் யாவரும் அறிந்ததே. பிரேமதாசாவும் கொடுக்க முன்வந்தார், விஜயதுங்கா கூட கொடுக்க இசைந்தார் என்றெல்லாம் பொதுஜன முன்னணியினரும் பதிலுக்கு பதிலாகப் பல தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்திய அரசுகூட மாகாண சபை நிர்வாகத்தில் 99 வீதத்தை புலிகளிடம் ஒப்படைக்க முன்வந்திருந்தது.

மொத்தத்தில், பல சந்தர்ப்பங்களில் பலர் பிரபாகரனுக்கு அதிகாரத்தை கையளித்து கைக்குள் போடப்பார்த்தனர் என்பதை புலிகளுக்கு எதிரானவர்களது தகவல்களே உறுதி செய்கின்றன.

இந்த நேரத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல் தலைவர் பழ.நெடுமாறன் எழுதிய நூலில் இருந்து சில பகுதிகளை தருகிறேன். இந்த மதிப்பீடு சரியா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறோம்.



லெனின் நடத்திய புரட்சிக்கு ரசிய இராணுவம் ஒத்துழைத்தது.

மசேதுங் நடத்திய புரட்சிக்கு சோவியத் ஒன்றியம் இடைவிடாது உதவியது.

வியட்நாம் விடுதலைக்கு சோவியத்தும், சீனாவும் ஒத்துழைத்தன.

இந்திய விடுதலைக்காக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் போராடியபோது ஜெர்மன், ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகள் உதவின.

பாலஸ்தீன போராட்டத்திற்கு 120 நாடுகளுக்கு மேல் ஆதரவு தருகின்றன.

ஆனால் பிரபாகரன் அவர்களுக்கு எந்தவொரு நாட்டின் உதவியும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் அவர் தமது போராட்டத்தை வெற்றிகரமாக முன்நடத்திச் செல்வதன் இரகசியம் என்ன?

பிரபாகரனின் இலட்சிய உறுதிதான் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அடித் தளமாக இருந்து வருகிறது. இவருக்கு முன் தமிழீழ மக்களின் தலைவர்களாக இருந்த பலருக்கு இந்த இலட்சிய உறுதி இல்லாததன் விளைவாகவே தமிழீழப் போராட்டம் பல பின்னடைவு களைச் சந்தித்தது.

சிறைவாசம் சிலரது சித்தத்தை குலைத்தது. இராணுவ கொடுமைகள் சிலரை நடுங்க வைத்தது. பதவி ஆசை பலரைப் பல்லிளிக்க வைத்தது. ஆனால் சிறீலங்கா அரசும், இந்திய அரசும் எவ்வளவோ ஆசை வலைகளை விரித்துப் பார்த்தன. படைபலத்தை காட்டி மிரட்டிப்பார்த்தன.

ஆனாலும் பிரபாகரனின் இலட்சிய உறுதியைக் குலைக்க முடியவில்லை.

அடர்ந்த கானகத்தின் நடுவே அமைக்கப்பட்டிருந்த பாசறையில், தம்பி பிரபாகரனுடன் நான் பேசிக் கொண்டிருந்தபோது அவர் கூறிய சில வார்த்தைகள்;

"அண்ணா! தமிழீழ இலட்சியத்தை ஒரு பொழுதும் கைவிடமாட்டேன். எங்கள் போராட்டத்தின் முடிவில் தமிழீழம் மலரும். அல்லது நான் மடிவேன். அதைத் தவிர வேறு இடைப்பட்ட வழி எதுவுமே இல்லை."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்